## பட்டு வளர்ச்சித் துறை

**1 பட்டு வளர்ச்சித்துறையில் அத்தியாவசிய பணியிடங்களான இளநிலை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புதல்**

தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறையின் இளநிலை ஆய்வாளர் பதவியானது அடிப்படை நிலை விரிவாக்கப் பணியாகும். இதற்கு அடுத்த நிலையில் தொழில் நுட்ப சேவை மையத்தில் உதவி ஆய்வாளர்கள் உள்ளனர். மாநிலம் முழுவதும் 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல், நவீன தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தேவைக்கு ஏற்ப முட்டைத் தொகுதிகள் / இளம்புழுக்கள் விநியோக ஏற்பாடு செய்தல், அரசினால் நிர்ணயிக்கப்பட்ட மல்பரி விரிவாக்கம், பட்டு உற்பத்தி உள்ளிட்ட குறியீடுகளை தொய்வின்றி எய்தும் நோக்கத்துடன் 2014–2015 ஆம் ஆண்டில் இளநிலை ஆய்வாளர்கள் பதவித் தரத்தில் 150 இளநிலை ஆய்வாளர்களும், 12 உதவி ஆய்வாளர்களும் நேரடி நியமன முறையில் நிரப்ப **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**2 அரசு பட்டுப்பண்ணைகளில் முப்பது பண்ணைக்குட்டைகள் அமைத்தல்**

தமிழகத்தில் மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில், பண்ணைக் குட்டைகள், தடுப்பு அணைகள், கசிவு நீர்க்குட்டைகளை உருவாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் அமைத்தல், ஏரி குளங்களில் தூர்வாருதல் முதலிய நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு **2013–2014**ஆம் ஆண்டில் 50 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 2014-2015ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்பை மேலும் ஊக்குவிக்க அரசு பட்டுப் பண்ணைகளில் கூடுதலாக 30 பண்ணைக் குட்டைகள் அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**3 பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்குதல்**

தமிழகத்தில் பட்டுத்தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், அதன் மூலம் அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவது அவசியமாகிறது.

2014-2015ஆம் ஆண்டில் 2,000 பட்டு விவசாயிகள் மற்றும் 500 பட்டு நூற்பு தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூரில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்படும். இத்திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக ரூபாய் 49.25 இலட்சம் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 4 உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

தமிழகம் முழுவதும் பட்டு வளர்ப்பு விவசாயிகளை ஊக்கப்படுத்திட அரசினால் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நலத் திட்டங்களில் வீரிய இரக மல்பரி புதிய நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதும் ஒன்றாகும். வீரிய இரக மல்பரி புதிய நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 10,500/– வீதம், அதிகபட்சமாக 5.00 ஏக்கருக்கு ரூபாய் 52,500/– வரை ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2014-2015ஆம் ஆண்டிலும், வீரிய இரக மல்பரி நடவு செய்வதனை ஊக்கப்படுத்த 3,000 ஏக்கருக்கு, மாநில அரசின் பங்காக ரூபாய் 1.05 கோடி மானியம் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**1. திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் 50 மகளிருக்கு காகிதக்கூழ் பொம்மைகள் தயாரித்தலுக்கான பயிற்சியளித்தல்**

தமிழகத்தின் பாரம்பரியமான கைத்திறத் தொழில்களில் ஒன்றான காகிதக்கூழ் பொம்மைகள், "கொலு" போன்ற விழாக்காலங்களில் பெருமளவு தேவையைக் கொண்டிருப்பனவாகும். இக்கலையை அழியாமல் பாதுகாத்துப் புத்துயிரூட்டி மேலும் வளரச் செய்ய, ஒரு பயிற்சித்திட்டம் தேவைப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் 50 மகளிருக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சியின்போது அனைத்துப் பயிற்சியாளர்களுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களும், மாதந்தோறும் ரூ.3000/– உதவித் தொகையும் வழங்கப்படும். இத்திட்டம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ரூ.80.00 இலட்சம் செலவில் செயல்படுத்திட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**2. ஈரோட்டில் ‘குருகுலம்’ முறையில் பஞ்சலோகச் சிற்பம் தயாரிப்பதற்கு பயிற்சி அளித்தல்**

பஞ்சலோகச் சிற்பங்கள் தயாரிப்பது தமிழ்நாட்டின் ஒரு பழமையான கைத்திறத் தொழிலாகும். இக்கைத்திறத் தொழிலைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல இத்தொழிலில் ஆர்வமுள்ள 6 இளம் கைவினைஞர்களுக்கு ஈரோட்டில் 2014–15 முதல் 2016–17 வரையிலான மூன்றாண்டு பயிற்சி, ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில், குருகுல முறையில் பஞ்சலோக சிற்பம் தயாரிப்பதற்கு பயிற்சி அளிக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 3. மூன்று வகை புதிய விருதுகள் அறிமுகப்படுத்துதல்

கடந்த மூன்று ஆண்டுகளில் கைவினைஞர்களுக்காக பல புதிய விருதுகளை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்** அறிமுகப்படுத்தி உள்ளார்கள். **2014–15** ஆம் ஆண்டு முதல் மேலும் மூன்று புதிய விருதுகளை கைவினைஞர்களுக்காக அறிமுகப்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

### (அ) கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது

தமிழ்நாடு கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு "**கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது**" என்னும் விருது **2014–15** முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்விருது ரூ.**2.50** இலட்சம் செலவில் ஒவ்வோர் ஆண்டும் இரு நபர்களுக்கு வழங்கப்படும்.

### (ஆ) குழு உற்பத்தி விருது

வழக்கமாக கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுவனவாகும். அவர்களில் தனிப்பட்ட ஒரு கைவினைஞரை விருது வழங்கும் பொருட்டு இனம் காண்பது கடினமான செயலாகும். எனவே ஒருங்கிணைந்து பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த கைவினைஞர்கள் அடங்கிய ஒரு குழுவினரை கௌரவிக்கும் நோக்கில் **"குழு உற்பத்தி விருது"** என்ற விருது அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் **3** குழுக்களுக்கு ரூ. **3.75** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

### (இ) பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது

கைவினைஞர்கள் கலைப்படைப்புகளோடு பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், **"பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது"** என்னும் விருது அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்விருது ஆண்டுதோறும் **3** கைவினைஞர்களுக்கு ரூ.**3.75** லட்சம் செலவில் வழங்கப்படும்.

**4. கண்காட்சிகள் நடத்த நிதியுதவி வழங்குதல்**

தமிழக கைவினைஞர்களுக்கு, அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் கருத்துசார் கண்காட்சிகளும், பிற கண்காட்சிகளும் பெருமளவு பயனளித்துள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய கண்காட்சிகள் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களை ஈர்க்கின்றன.

கண்காட்சிகளின் எண்ணிக்கை 2011–12ல் 180 ஆகவும், 2012–13ல் 226 ஆகவும், 2013–14 ல் 255 ஆகவும் உயர்ந்துள்ளது.

2014–15 ஆண்டில் நடத்தப்படவுள்ள கண்காட்சிகளின் எண்ணிக்கை 275 ஆகும். இதற்கான செலவு மதிப்பீடு ரூ.225.00 இலட்சம் ஆகும். மொத்தச் செலவினத்தின் 20 விழுக்காடு ரூ.45.00 இலட்சத்தை ஒவ்வொரு ஆண்டும் அரசே ஏற்கும் என்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**5. ‘‘வாழும் கைவினைப் பொக்கிஷம்’’ மற்றும் ‘‘அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான போட்டி’’ ஆகிய விருதுகளை ஆண்டுதோறும் வழங்குதல்**

2013–14 ஆம் ஆண்டில், முதன் முதலாக **“வாழும் கைவினைப் பொக்கிஷம்”** எனும் அரிய விருது கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 10 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்கும் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்விருது **ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம், தாமிரப்பத்திரம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்** ஆகியவை கொண்டதாகும்.

தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்கவும், அவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுவதை உறுதி செய்யும் வகையில் 2013–14ம் ஆண்டில் **“அடுத்த தலைமுறை கைவினைஞர் விருது”** என்ற விருதுப் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

30 வயதுக்குட்பட்ட இளம் கைவினைஞர்களுக்கிடையே கைத்திறன் போட்டிகள் 16 கைவினைப் பிரிவுகளில் 13 மையங்களில் நடத்தப்பட்டு 66 முதல் பரிசுகளும் 66 இரண்டாவது பரிசுகளும் ரூ.6.50 லட்சம் செலவில் வழங்கப்பட்டன.

‘‘வாழும் கைவினைப் பொக்கிஷம்’’ விருதும் ‘‘அடுத்த தலைமுறை கைவினைஞர்’’ விருதும் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படவுள்ளதால் இவற்றுக்கான நிதியுதவியான ரூ.15.00 இலட்சம் மற்றும் ரூ.6.50 இலட்சம், ஆக மொத்தம் ரூ.21.50 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் அரசே வழங்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.